## Tamil Literary Garden

(Charitable Registration Number 86107 1371 RR0001)

Founded in 2001 and registered as a charitable organization in Toronto, the Tamil Literary Garden is committed to the promotion of studies and literary activities in Tamil, both nationally and internationally. Its mandate includes promoting creative writing, translations, book releases, awards, conferences and workshops.

கனடிய தமிழ் இலக்கியத் தோட்டம், கல்வியாளர்கள், எழுத்தாளர்கள், வாசகர்கள், விமர்சகர்கள், கொடையாளர்கள் ஆகியவர்களின் ஆதரவுடன் ஓர் அறக்கட்டளையாக 2001ஆம் ஆண்டு ரொறொன்ரோவில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த இயக்கத்தின் பொதுவான நோக்கம் உலகமெங்கும் பரந்திருக்கும் தமிழை வளர்ப்பதாகும். தமிழ், ஆங்கில நூல்களின் மொழிபெயர்ப்பு, அரிய தமிழ் நூல்களை மீள் பதிப்பு செய்வது, தமிழ் பட்டறைகள் நடத்துவது, நூலகங்களுக்கு இலவசமாக தமிழ் நூல்கள் அளிப்பது, தமிழ் சேவையாளர்களுக்கு விருதுகள் வழங்குவது ஆகியவை இதனுள் அடங்கும்.

---

*கனடாவில் கடந்த 21 வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் தமிழ் இலக்கியத் தோட்டம் அமைப்பானது வருடாவருடம் உலகத்தின் மேன்மையான தமிழ் இலக்கியப் படைப்பாளிகளை அடையாளம் கண்டு விருது வழங்கி கௌரவித்து வருகிறது.*

***2021ஆம் வருட விருதாளர்கள் கீழே வருமாறு.***



### Lifetime Achievement Award

Professor A.R. Venkatachalapathi

இயல் விருது

**பேராசிரியர் ஆ.இரா.வேங்கடாசலபதி**

கடந்த நாற்பது ஆண்டுகளாக, வரலாறு,மொழி, இலக்கியம், பண்பாடு, அரசியல், சமூகம் என பல்வேறு துறைகள் சார்ந்து வேங்கடாசலபதி தொடர்ச்சியாக எழுதி வருகிறார். தற்போது சென்னை வளர்ச்சி ஆய்வு நிறுவனத்தில் பேராசிரியராக பணியாற்றுகிறார். தமிழிலும் ஆங்கிலத்திலுமாக அறுபதுக்கு மேற்பட்ட நூல்களையும் பல ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ள இவர் தமிழ் இலக்கியம், தமிழ்ப் பண்பாட்டு வரலாறு ஆகியவற்றை வெளிநாட்டினரிடம் கொண்டு சேர்ப்பதில் பெரும் பங்காற்றியுள்ளார்.

இவர் கணிசமான மொழியாக்கங்களையும் செய்திருக்கிறார். சிகாகோ, பேர்க்லி, டொராண்டோ, நியூசீலாந்து பல்கலைக்கழகங்களில் தன் முக்கிய ஆய்வுகள் குறித்து சிறப்புரை ஆற்றியிருக்கிறார். வருகைதரு பேராசிரியராக ஹார்வர்டு, சிகாகோ பல்கலைக்கழகங்களில் பணியாற்றியிருக்கிறார். தொடர்ந்து இருமொழி அறிஞராக தீவிரமாகவும் காத்திரமாகவும் இவர் இயங்கிக்கொண்டிருப்பது தமிழுக்கு பெருமை.



### Fiction award

P.A.Jayakaran

புனைவுப் பரிசு

**பா. அ. ஜயகரன்**

பா. அ. ஜயகரன் கதைகள்

கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக நாடகம், கவிதை, சிறுகதை எனப் புலம்பெயர் தமிழ் இலக்கிய உலகில் செயற்பட்டு வரும் பா. அ. ஜயகரன் அவர்கள் தமிழ் படைப்புலகில் முக்கியமானவர். புலம்பெயர்ந்த தமிழ் இலக்கிய உலகில் சிறந்த நாடகப் பிரதிகளுக்காகவும் நன்கு அறியப்பட்டவர். "எல்லாப் பக்கமும் வாசல்" (2000ஆம் ஆண்டு), "என்னை விசாரணைக்கு உட்படுத்துங்கள்" (2005ஆம் ஆண்டு) ஆகிய இவரது நாடக நூல்கள் இதுவரை வெளியாகியுள்ளன.

இவருடைய படைப்புகள் போகும் போக்கில் எளிய முறையில் சொல்லப்படுவதால் அவற்றை எத்தனை தடவையும் படிக்கலாம். அலுப்பு கொடுக்காமல் ஒவ்வொரு வாசிப்பிலும் ஒரு புது அர்த்தத்தை அவை தரும். சொற்கள் தேர்விலும் வசனம் அமைப்பதிலும் போதிய கவனம் செலுத்துவதால் சிறுகதைக்கான நேர்த்தி இலகுவில் இவருக்கு அமைந்து விடுகிறது. புகலிட அனுபவங்களுக்கூடாக தமிழ் இலக்கிய வெளியில் நிலவும் எல்லைகளைத் தாண்டும் புகலிட எழுத்துகளில் பா. அ. ஜயகரன் கதைகள் கவனம் பெறுகின்றன.

நீண்டகாலமாக புனைவு வெளியில் இயங்கி வரும் பா. அ. ஜயகரன், 2021 ம் ஆண்டுக்கான புனைவுப் பரிசை பெறுகிறார்.



### Non-fiction award

K.Chandru

அபுனைவு விருது

**கே.சந்துரு**

தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2021ஆம் ஆண்டுக்கான அபுனைவு விருது, சுயசரிதை நூலுக்காக கே.சந்துரு அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

ஒரு தனி மனிதனாய், இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் ஆணித்தரமாக குறிப்பிட்டுள்ள மனித உரிமைகளை, கடைக்கோடியினரும் அறிந்து அனுபவிக்க அவர்களுக்காக வழக்குரைஞராக போராடியவர். நீதிபதியாக பதவி உயர்ந்தபின் அஞ்சாநெஞ்சராக தன் தீர்ப்புகள் மூலம் அவர் எதிர்கொண்ட சவால்களை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது "நானும் நீதிபதி ஆனேன்" என்ற இந்த நூல். வழக்கறிஞராக பணியாற்றிய காலத்தில் இவர் பழங்குடியினருக்காக நடத்திய சட்டப் போராட்டத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்ட சமீபத்திய "ஜெய் பீம்" படம்